


# வழியைக் காட்டுகிற அடையாளங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 2:1–11; யோவான் 4:46–54; யோவான் 5:1–16; மாற்கு 3:22, 23; மத்தேயு 12:9–14; யோவான் 5:16–47.

**மனன வசனம்:** இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்குமுன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. யோவான் 20:30, 31.

யோவான் எதற்காக அந்தச் சுவிசேஷப் புத்தகத்தை எழுதினார்? இயேசுவின் அற்புதங்களை வலியுறுத்தவா? அல்லது இயேசுவின் குறிப்பிட்ட போதனைகளை வலியுறுத்தவா? அவர் அதை எழுதினதற்கான காரணம் என்ன?

தான் எழுதினதற்கான காரணத்தை பரிசுத்த ஆவியின் வல்லமையாலும், ஏவுதலினாலும் யோவான் சொல்கிறார். இயேசுவின் வாழ்க்கைபற்றி அநேக காரியங்களை எழுதமுடியும் என்றும் (யோவான் 21:25), இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும்’ உதவுகிற சம்பவங்களை, தான் எழுதியிருப்பதாகவும் சொல்லுகிறார். யோவான் 20:31.

இயேசு ஆரம்பத்தில் செய்த அற்புதங்கள் சிலவற்றை யோவான் சொல்லுவதுபற்றி இந்த வாரம் பார்ப்போம். கலியாணத்தில் தண்ணீரை ரசமாக மாற்றியது, வியாதியாயிருந்த ஒருவரின் மகனைக் குணமாக்கியது, பெதஸ்தா குளத்தில் ஒருவனைக் குணமாக்கியது போன்றவை அதில் அடங்கும்.

இயேசு இந்த அற்புதங்களை ‘அடையாளங்கள்’ என்று அழைக்கிறார். அவற்றை வெறுமனே தெரு அடையாளங்கள் போன்றல்ல, இயேசுவை மேசியாவாகக் காட்டுகிற அற்புத அடையாளங்களாகக் காட்டுகிறார். இந்தச் சம்பவங்கள் அனைத்திலும், விசுவாசத்தோடு செயல்பட்டவர்களைப் பார்க்கலாம். நாமும் அவ்வாறே செய்யுமாறு, அவர்களது முன்மாதிரி அழைக்கிறது.

***2024, அக்டோபர் 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# கானா ஊர் கலியாணம்

**கானா ஊரில் இயேசு செய்த அடையாளம் என்ன, சீடர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு அது எவ்வாறு உதவியது? யோவான் 2:1-11.**

இயேசு தண்ணீரை ரசமாக மாற்றியது சீடர்கள் அவரைப் பின்பற்றத் தீர்மானிப்பதற்கான ஆதாரமாக விளங்கியது. ஆனாலும், அவர் தேவனிடமிருந்துவந்தவர் என்பதற்கான பலத்த அடையாளமாக அது இல்லை. ஏனெனில், அவர் தேவன் என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் ஆயத்தமில்லாமல் இருந்தார்கள்.

மோசே இஸ்ரவேலரின் தலைவராக இருந்தபோது, அநேக ‘‘அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும்’’ எகிப்திலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணினார். உபா. 6:22; 26:8. எகிப்தியர்களிடமிருந்து இஸ்ரவேலரை விடுவிப்பதற்கு தேவன் அவரைப் பயன்படுத்தினார். (ஒருவிதத்தில், அவரை அவர்களுடைய ‘‘இரட்சகர்’’ எனலாம்).

மோசேயைப்போல ஒரு தீர்க்கதரிசி வருவாரென தேவன் மோசேமூலம் தீர்க்கதரிசனம் சொன்னார். அவருக்குச் செவிகொடுக்கும்படி இஸ்ரவேலரை தேவன் கேட்டுக்கொண்டார். உபா 18:15; மத் 17:5; அப் 7:37. அந்தத் தீர்க்கதரிசி ‘இயேசுவே’; யோவான் 2இல் இயேசு முதல் அற்புதத்தைச் செய்தார்; அதுவும் கூட எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்த செயலையே சுட்டிக்காட்டியது.

எகிப்தியர்கள் நைல் நதியை தெய்வமாகப் பார்த்தார்கள்; அது அவர்களுக்கு முக்கிய ஆதாரமாகவும் இருந்தது. வாதைகளில் ஒன்று அங்குதான் நடந்தது; அதன் தண்ணீர் இரத்தமாக மாற்றப்பட்டது. கானா ஊரில் இயேசு அதேபோன்ற ஓர் அற்புதத்தையே செய்தார்; ஆனால் தண்ணீரை இரத்தமாக மாற்றுவதற்குப் பதிலாக, ரசமாக மாற்றினார்.

யூதசுத்திகரிப்பு சடங்கிற்காக வைக்கப்பட்டிருந்த ஆறு கற்சாடிகளின் தண்ணீரில் அற்புதம் செய்யப்பட்டது; இது இந்த அற்புதத்தை இரட்சிப்புகுறித்த வேதாகமக் கருத்துகளுடன் மேலும் நெருக்கமாக்குகிறது. தண்ணீரை ரசமாக மாற்றியதையும், அது யாத்திராகம அனுபவத்திற்கு இசைவாக இருந்ததையும் குறிப்பிடுவதன்மூலம், இயேசுவை நம் இரட்சகராக யோவான் சுட்டிக்காட்டுகிறார்.

இயேசு கொடுத்த புளிக்காத ரசத்தை ருசிபார்த்த பந்திவிசாரிப்புக்காரர் என்ன நினைத்தார்? அதன் தரம் அவரை வியக்கவைத்தது; இயேசு அற்புதம் செய்தது அவருக்குத் தெரியாது, நல்ல ரசத்தைக் கடைசிவரைக்கும் வைத்திருந்ததாக நினைத்துக் கொண்டார்.

புளித்த, புளிக்காத திராடசைச் சாறுக்கான கிரேக்க வார்த்தை ஓய்னோஸ். அந்த அற்புதத்தால் உருவான ரசம் மதுவகையல்ல என்று எலன் ஜி ஒய்ட் சொல்லுகிறார். அங்கு நிகழ்ந்ததை அறிந்தவர்கள், அதுகுறித்து ஆச்சரியமடைந்தார்கள்.

---

**நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கான காரணங்கள் என்ன? பல காரணங்கள் இருக்கலாம்.**

# கலிலேயாவில் இரண்டாவது அடையாளம்

பூமியில் இயேசு ஊழியம் செய்த நாட்களிலெல்லாம், மக்கள் தம்மை விசுவாசிப்பதற்கு ஏதுவான அற்புதங்களைச் செய்தார். மற்றவர்களும் இயேசுவை விசுவாசிக்கும்படியாகயோவான்அந்த அற்புதங்களைப்பதிவுசெய்திருக்கிறார்.

**யோவான் 4:46-54இன் சம்பவத்தை, கலியாண விருந்தின் அற்புதத்துடன் தொடர்புபடுத்தி சுவிசேஷகர் சொல்வதற்கான காரணம் என்ன?**

---

கலிலேயாவில் இயேசு செய்த இரண்டாவது அடையாளம்பற்றிச் சொல்லும்போது, கானா ஊரில் செய்த முதலாம் அடையாளத்தை யோவான் சுட்டிக்காட்டுகிறார். இயேசு செய்த அடையாளங்கள் அவர் யாரென்பதை நீங்கள் காண உதவும் என்பதே யோவானின் நோக்கம். பிறகு யோவான், ‘இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்தபின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்’ என்றும் கூறுகிறார்.

அந்தப் பிரபுவிடம் இயேசு கடினமாகப் பேசியதுபோல முதலில் தோன்றலாம். ஆனால், தன் மகனைக் குணமாக்கினால்தான் இயேசுவை நம்பமுடியும் என்கிற நிலைக்கு அந்த அதிகாரி வந்திருந்தான். இயேசு அவனது இருதயத்தை வாசித்து, அவனது மகனுடைய உயிருக்கு ஆபத்தாயிருந்த நோயைவிட அவனது ஆவிக்குரிய இருள் கொடியதெனச் சுட்டிக்காட்டுகிறார். வானத்திலிருந்து திடீர் வெளிச்சம் புறப்பட்டதுபோல, தன் ஆவிக்குரிய அந்தகாரம் தன் மகனுடைய உயிரையே பறிக்கலாம் என்பதைப் புரிந்துகொள்கிறான்.

இயேசுவே மேசியா என்பதை நிரூபிக்கிற பண்புகள் அற்புதங்களுக்கு இல்லை என்பதை அறிவது முக்கியம். மற்றவர்களும் அற்புதங்கள் செய்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் மெய்யான தீர்க்கதரிசிகள், மற்றவர்கள் பொய்யானவர்கள். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்கள் இருப்பதை அற்புதங்கள் வெளிப்படுத்துகின்றன; அற்புதங்களை தேவன்தாம் செய்திருக்கவேண்டும் என்பதில்லை. (சாத்தானால் ‘அற்புதங்களைச்’ செய்யமுடியும்; ‘அற்புதங்கள்’ என்றாலே, இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் என்று அர்த்தம்).

அந்தப் பிரபு வியாகுலத்தோடு இயேசுவின் காலில் விழுந்து, தனக்கு இரங்கி, தன் மகனைக் குணமாக்க வேண்டினான். அதற்கு இயேசுவின் பதில் நம்பிக்கையளிப்பதாக இருந்தது. ‘நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்’ என்றார். யோவான் 4:50. ‘பிழைத்திருக்கிறான்’ என்று நிகழ்காலத்தில் உள்ளது. இதை ‘எதிர்காலத்திற்குரிய நிகழ்காலம்’ என்பார்கள்; எதிர்கால நிகழ்வு ஒன்றை ஏற்கனவே நிகழ்ந்துவிட்டதுபோல உறுதியாகச் சொல்லுவதாகும். அவன் உடனடியாக வீட்டிற்குச் செல்லவில்லை; மாறாக இயேசுவை விசுவாசித்து, அடுத்தநாளில்தான் வீட்டிற்குச் சென்றான்; இயேசு அந்த வார்த்தைகளைச் சொன்ன சமயத்திலேயே தன் மகன் ஜுரம் நீங்கி குணமானதை அறிந்துகொண்டான். இயேசுவில் விசுவாசம் வைப்பதற்கு எவ்வளவு வல்லமையான காரணம் இது!

---

**ஏதாவது அற்புதத்தைக் காணும்போது, அது தேவன் செய்ததென உறுதிப்படுத்துவதற்குமுன் வேறு என்ன நிபந்தனையையும் கவனிக்கவேண்டும்?**

# பெதஸ்தா குளத்தருகே அற்புதம்

யோவான் பதிவுசெய்கிற அடுத்த அடையாளம் பெதஸ்தா குளத்தருகே நடந்த ஒன்று. யோவான் 5:1-9. அந்தக் குளத்தின் தண்ணீரை ஒரு தூதன் கலக்குவதாகவும், முதன்முதலாக உள்ளே இறங்குகிற வியாதியஸ்தன் குணமாவான் என் றும் நம்பப்பட்டது. எனவே அடுத்தமுறை தண்ணீர் கலக்கப்படும்போது எப்படியாவது குணமாகிவிட வேண்டுமென்று ஏராளமான வியாதியஸ்தர்கள் அந்தக் குளத்தின் மண்டபங்களில் குவிந்திருந்தார்கள். இயேசு எருசலேமுக்குச் சென்றார்; அந்தக் குளத்தை அவர் கடந்துசெல்கையில், அங்கே காத்திருந்த கூட்டத்தாரைப் பார்த்தார்.

அது எத்தகைய காட்சியாக இருந்திருக்க வேண்டும்! எத்தனை நாள் காத்திருந்தாலும் குணமாக வாய்ப்பே கிடைக்காமல் போகிற சிலர் அங்கே இருந்திருக்கலாம். இயேசுவுக்கு எப்படிப்பட்ட வாய்ப்பு அது!

**அந்தக் குளத்தருகே இருந்த அனைவருமே குணமாகத்தான் விரும்பியிருப்பார்கள். யோவான் 5:1-9. ஆனால் இயேசு அந்தத் திமிர்வாதக்காரனிடம் குணமாக விரும்புகிறாயா என்று ஏன் கேட்டார்? யோவான் 5:6.**

வெகுகாலம் வியாதிப்பட்ட நிலையிலேயே இருக்கிற ஒருவருக்கு அது இயல்பான வாழ்க்கையாக மாறியிருக்கும். அந்த வியாதி நீங்குவது சிலசமயம் அசௌகரியமாகக்கூடத் தெரியலாம். அவன் குணமாக விரும்பியது அவனது பதிலில் தெரிகிறது. ஆனால் அவனது கால்களை உண்டாக்கியவர் அவனுக்கு முன்பாக நிற்கிறார்; அவனோ தவறான இடத்தில் குணமாகுதலைத் தேடினான். தன்னிடம் பேசுகிறவர் யாரென அவனுக்குத் தெரியவில்லை; ஆனாலும் குணமான பிறகு, இயேசு விசேஷமானவர் என்பதை அவன் புரிந்துகொள்ளத் தொடங்கியிருப்பான்.

'தம்மில் விசுவாசம் வைக்கும்படி அந்த வியாதியஸ்தனிடம் இயேசு கேட்கவில்லை. ''எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட'' என்று மட்டுமே சொல்லுகிறார். அந்த வார்த்தையில் அவனுக்கு விசுவாசம் உண்டானது. ஒவ்வொரு நரம்பும் தசையும் புத்துயிர் பெற்றன; முடங்கியிருந்த கைகால்கள் ஆரோக்கியமாகச் செயல்பட ஆரம்பித்தன. கேள்வியின்றி கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படியச் சித்தங்கொண்டான்; அவனது சித்தத்திற்கு அவனது எல்லாத் தசைகளும் இணங்கின. துள்ளியெழுந்து, சுறுசுறுப்பாக மாறினான். தெய்வீக உதவி கிடைக்குமென இயேசு அவனுக்கு எந்த நிச்சயமும் கொடுக்கவில்லை. அவன் சந்தேகித்து, தாமதித்து, தான் குணமாகவிருந்த ஒரே வாய்ப்பையும் வீணடித்திருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசித்தான்; அதன்படி செயல்பட்டதால் பெலனைப் பெற்றுக்கொண்டான்.'[1]

[1] Ellen G. White, The Desire of Ages, pp. 202, 203.

---

**இயேசு பிறகு அவனை தேவாலயத்தில் கண்டு, 'இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே' என்று சொன்னார். யோவான் 5:14. வியாதிக்கும் பாவத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன? எல்லா வியாதிகளுமே குறிப்பிட்ட சில பாவங்களால் வருவதில்லை என்பதைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியம்?**

# கடின இருதயங்கள்

அடையாளங்கள், அற்புதங்கள் போன்றவை தேவனிடமிருந்துதான் வர வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவை தேவனிடமிருந்து வந்தால், அவற்றைப் புறக்கணிப்பது ஆபத்தானது.

**இயேசுவையும் அவர் செய்த அற்புதத்தையும் மதத்தலைவர்கள் இருதயக் கடினத்துடன் அணுகியதுடன் ஒப்பிடும்போது, என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? யோவான் 5:10-16.**

---

குணமாக்கப்பட்டவனிடம் இயேசு தம்மை வெளிப்படுத்தியபிறகு, இயேசுவே தன்னைக் குணமாக்கினார் என்று மதத்தலைலவர்களிடம் சொன்னான். உண்மையிலேயே அதற்காக அவரைத் துதித்திருக்கவேண்டும், மாறாக அந்தத் தலைவர்கள், 'அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகை தேடினார்கள்'. யோவான் 5:16.

அவசர நிலையில்மட்டுமே ஓய்வுநாளில் குணமாக்குவது அனுமதிக்கப்பட்டிருந்தது. அவன் 38 வருடங்கள் வியாதிப்பட்டிருந்தான்; எனவே அவன் அவசரநிலை நோயாளி அல்ல. மேலும், அவன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கவேண்டிய அவசியம் என்ன? தேவனிடமிருந்து அப்படியொரு அற்புதத்தைச் செய்ய வல்லமையைப் பெற்ற ஒருவர், ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கலாமா கூடாதா என்பதை அறிந்திருக்க மாட்டாரா? ஆனால் மனிதன் உண்டாக்கின சட்டதிட்டங்களையும் தாண்டி, ஆழமான வேதாகமச் சத்தியங்களை அவர்கள் கண்டுகொள்ளவேண்டுமென்று இயேசு விரும்பினார்; ஏனென்றால் சில விஷயங்களில் அந்தச் சட்டதிட்டங்கள்மூலம் மெய்யான விசுவாசத்தை முடக்கியிருந்தார்கள்.

**ஆதாரமிருந்தும் உணரமுடியாத அளவுக்கு மக்கள் எவ்வளவு கடினமாக மாறக்கூடும் என்பதுபற்றி பின்வரும் சம்பவங்கள் சொல்லுவது என்ன? யோவான் 9:1-16; மாற்கு 3:22, 23; மத் 12:9-14.**

---

இந்த மதத்தலைவர்கள் எவ்வாறு இவ்வளவு குருடர்களாக இருந்திருக்க முடியும்? அவர்களுடைய சீர்கேடான இருதயங்களும், மேசியா அவர்களை அப்போதே ரோமர்களிடமிருந்து விடுவிப்பாரென்கிற தவறான நம்பிக்கையும், அதிகார ஆசையும், தேவனிடம் தங்களை அர்ப்பணிக்காததுமே காரணம். இவை அனைத்தும்தான் அவர்களுக்கு முன்னிருந்த சத்தியத்தை அவர்கள் புறக்கணிக்கச் செய்தன.

---

**யோவான் 5:38-42இல் இயேசு எதைக் குறித்து எச்சரிக்கிறார்? அதிலிருந்து என்ன புரிகிறது? அதாவது, நம்மிடமுள்ள எந்தக் காரியம் நாம் சத்தியங்களைக் கண்டு, அவற்றை நம் வாழ்க்கையில் பயன்படுத்தாதபடி செய்யலாம்?**

---

# இயேசுவின் உரிமைக்கோரிக்கைகள்

பெதஸ்தாகுள அற்புதம் இயேசு யாரென்பதை வலியுறுத்திக் காட்ட யோவானுக்கு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. அந்த அற்புதத்தை விவரிக்க ஒன்பது வசனங்களையும், அந்த அற்புதத்தைச் செய்தவரை விவரிக்க சுமார் 40 வசனங்களையும் செலவிடுகிறார்.

**இயேசு ஓய்வுநாளில் அற்புதம் செய்ததற்காக அவரை ஏன் துன்பப்படுத்தினார்கள்? யோவான் 5:16-18.**

---

இயேசு ஓய்வுநாளை மீறினதுபோல யோவான் 5:18 இருப்பது சற்று அசௌகரியமாகத் தெரியலாம். ஆனால் யோவான் 5:16-18ஐ ஆராய்ந்தால், ஓய்வுநாளில் தாம் செய்த 'கிரியை' தம் பிதாவோடு தமக்குள்ள உறவோடு இசைவானது என்று அங்கே சொல்லுகிறார். தேவன் ஓய்வுநாளில் பிரபஞ்சத்திற்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் இருப்பதில்லை. இயேசு ஓய்வுநாளில் செய்த செயல், தமது தெய்வீகதன்மைபற்றி அவர் உரிமைகோருவதை நிரூபிப்பதாகவும் இருந்தது. இயேசு ஓய்வுநாளை மீறினார், தம்மை தேவனுக்குச் சமமாகக் கூறினார் என்பதின் அடிப்படையில் மதத்தலைவர்கள் அவரை உபத்திரவப்படுத்தினார்கள்.

**இயேசு மெய்யாகவே யாரென்று தலைவர்கள் காண உதவும்படி இயேசு சொன்னது என்ன? அதற்கு அப்போது அவர் செய்திருந்த அற்புதம் எவ்வாறு வல்லமையாகச் சான்றளித்திருந்தது? யோவான் 5:19-47.**

இயேசு தம் செயல்களை மூன்று நிலைகளில் உறுதிப்படுத்துகிறார். முதலாவது, பிதாவோடு தமக்குள்ள நெருங்கிய உறவை விவரிக்கிறார். யோவான் 5:19-30. மரித்தோரை நியாயந்தீர்க்கவும் எழுப்பவும் தாம் வல்லமையைப் பெற்றிருக்கிற அளவுக்குத் தாமும் பிதாவும் இசைந்து செயல்படுவதாக இயேசு சுட்டிக் காட்டுகிறார். யோவான் 5:25-30.

இரண்டாவது, இயேசு தமக்கு ஆதரவாக அடுத்தடுத்து நான்கு 'சாட்சிகளை' அழைக்கிறார். அதாவது, யோவான் ஸ்நானன் (யோவான் 5:31-35), இயேசு செய்கிற அற்புதங்கள் (யோவான் 5:36), பிதா (யோவான் 5:37,38), வேதவாக்கியங்கள் (யோவான் 5:39). இந்தச் 'சாட்சிகள்' ஒவ்வொன்றும், இயேசுவுக்கு சாதகமாகச் சாட்சியளிக்கின்றன.

இறுதியாக, யோவான் 5:40-47இல், தம்மைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் தங்களைத் தாங்களே குற்றவாளிகளாக்குவதை இயேசு விளக்குகிறார்; தம்முடைய ஊழியத்தையும் அவர்களுடைய சுயநாட்ட மனநிலையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிற மோசேயே அவர்களைக் குற்றஞ்சாட்டுவான் என்கிறார். யோவான் 5:45-47.

---

**கிறிஸ்துவிடம் முற்றிலும் அர்ப்பணிக்காமல், சரியான உபதேசங்களை அறிந்திருப்பதுதான் தேவனை விசுவாசிப்பது என்கிற கண்ணிக்குள் சிக்காமல் எவ்வாறு கவனமாக இருக்கலாம்? உங்கள் பதிலை ஓய்வுநாள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.**

# மேலும் படிக்க:

'இயேசு அந்தத் திமிர்வாதக்காரனுக்கு தெய்வீக உதவி குறித்து எந்த நிச்சயமும் கொடுக்கவில்லை. அவன் சந்தேகித்து, தாமதித்து, தான் குணமாவதற்கான ஒரே வாய்ப்பையும் இழந்திருக்கலாம். ஆனால் அவன் கிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசித்தான்; அதன்படி செயல்பட்டதால் பெலத்தைப் பெற்றான்.

'அதே விசுவாசத்தால் நாமும் ஆவிக்குரிய சுகத்தைப் பெறலாம். பாவத்தால் தேவனுடைய ஜீவனை வேண்டாமெனத் தள்ளிவிட்டோம். நம் ஆத்துமாக்கள் முடமாகிவிட்டன. அந்த வியாதியஸ்தனால் நடக்கமுடியாமல் இருந்ததுபோல, நம்மில்நாமே பரிசுத்தமான வாழ்க்கை வாழ, திறனற்றிருக்கிறோம். ... நம்பிக்கையிழந்த, போராட்டத்திலுள்ள இந்த நபர்கள் மேலே நோக்குவார்களா? இரட்சகர் தம் இரத்தத்தால் விலைகொடுத்து வாங்கினவர்களை நோக்கி, சொல்லமுடியாத கனிவோடும் இரக்கத்தோடும் ''நீங்கள் குணமடைவீர்களாக'' என்கிறார். நீங்கள் ஆரோக்கியமும் சமாதானமும் பெற்றவர்களாக எழுந்திருக்கக் கட்டளையிடுகிறார். நீங்கள் முற்றிலும் குணமானதாக உணருகிற வரையிலும் காத்திருக்க வேண்டாம். அவரது வார்த்தையை விசுவாசியுங்கள், அது நிறைவேறும். கிறிஸ்துவின் பக்கத்தில் இருக்க விரும்புகிறவர்கள். அவரைச் சேவிக்க விரும்புங்கள்; அவரது வார்த்தையின்படி செயல்படும்போது, அவரது பெலத்தைப் பெறுவீர்கள். நீண்டகாலம் ஈடுபட்டதால் உங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையும் கட்டிப்போடுகிற தீவிர சிற்றின்பம், தீயப்பழக்கம் எதுவாக இருந்தாலும், அதிலிருந்து விடுவிக்க கிறிஸ்து ஆசைப்படுகிறார், ஏங்குகிறார். ''பாவங்களினால் மரித்த'' ஆத்துமாவுக்கு உயிர்கொடுப்பார். எபே 2:1. பெலவீனத்தாலும், மோசமான சூழலாலும், பாவச்சங்கிலிகளாலும் சிறைப்படுத்தப்பட்டுள்ளவரை விடுவிப்பார்'.[1]

'தேவதூஷணக் குற்றச்சாட்டை இயேசு மறுத்தார். நீங்கள் என்னைக் குற்றஞ்சாட்டுகிற கிரியையைச் செய்வதற்கான அதிகாரம், நான் தேவ குமாரன் என்பதே; இயல்பிலும் சித்தத்திலும் நோக்கத்திலும் அவர் தேவனுடன் ஒன்றுபட்டிருக்கிறார் என்று சொன்னார்.'[2]

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *இந்த வாரப்பாடத்தைத் தியானியுங்கள். இந்தக் குணமாக்குதல்களைச் சாத்தியமாக்கினது விசுவாசம்தான். மாறாக தலைவர்கள், சந்தேகம்-அவநம்பிக்கையின் ஆபத்துக்களை வெளிப்படுத்தினார்கள். கேள்விகளையும் (இது எல்லாருக்கும் இருப்பது) சந்தேகத்தையும் குழப்பக்கூடாது? இரண்டும் ஏன் ஒன்றல்ல, இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்திருப்பது ஏன் முக்கியம்?*

2 *வியாழக்கிழமை கடைசிக் கேள்வியைப் பாருங்கள். செவந்த்-டே அட்வென்டிஸ்டுகளாகிய நாம் இந்த ஆபத்துபற்றி ஏன் குறிப்பாக கவனமாக இருக்கவேண்டும்? சரியான ஓய்வுநாளை அறிந்திருப்பதும் கைக்கொள்வதும் அல்லது அல்லது மரித்தோரின் நிலையை அறிந்திருப்பதும் எவ்வளவுதான் முக்கியமாக இருந்தாலும், இந்த சத்தியங்கள் ஏன் நம்மை இரட்சிப்பதில்லை? எது நம்மை இரட்சிக்கிறது. ஏன்?*

3 *யோவான் 5:47ஐ கவனமாக வாசியுங்கள். இயேசு இங்கே எச்சரித்ததுபோல இன்று பலர் எவ்வாறு உலகளாவிய ஜலப்பிரளயத்தையும் அல்லது ஆறுநாள் சிருஷ்டிப்பையும் மறுக்கிறார்கள்?*

# முகாம் கூடாரத்தில் கலக்கம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

தென்மேற்கு அலாஸ்காவில் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கோடை முகாம் நடைபெற்றது; அலாஸ்காவைச் சேர்ந்த எட்டு பழங்குடி பெண்கள் அங்கிருந்த கூடாரத்தில் இரவு படுப்பதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அப்போது இனம்புரியாத அச்சம் காணப்பட்டது. கூடாரத்திலிருந்த இரண்டு ஆலோசகர்களும் அதை உணர்ந்தார்கள். ஏதோ தீமை, ஆபத்து நேரிடுவதுபோல இருந்தது.

ஒரு ஆலோசகர் ரேச்சல்; 21வயது; அவருக்கு பயங்கர களைப்பாக இருந்தது; தூங்க முடியவில்லை. தீயதூதர்களின் செயல்பாடு அதிகமாக இருந்ததை உணர்ந்தார். கூடாரத்திலிருந்த எட்டு வாலிபப்பெண்களை நினைத்தபோது கலக்கமாக இருந்தது. அவர்களில் பலர் அத்துமீறலுக்கும், சுயதீங்குக்கும், போதைப்பொருட்களுக்கும் ஆளானவர்கள். ஒரு பெண்ணுடைய மாமா ஒரு ஷாமனாக இருந்தார்.

ரேச்சல் எழுந்து விளக்கை ஏற்றினார். ஆகஸ்ட் மாதத்தில், அலஸ்காவில் கோடை காலம்கூட கடும் குளிராக இருக்கும். இயேசுவைப் போற்றிப் பாடினார். கூச்சசுபாவம் உடையவர் என்பதால் பொதுவாக அவர் அப்படி பாடுவதில்லை. ஆனால் பாடல் தானாக வந்தது. பாடிக்கொண்டே ஒவ்வொரு பெண்ணிடமும் சென்று, அவருக்காக ஜெபித்தார். இறுதியாக அந்தப் பெண்கள் தூங்கினார்கள்.

அதன்பிறகு, ஒவ்வொரு நாள் இரவும் ரேச்சல் அந்தப் பெண்களுடன் சேர்ந்து பாடல் பாடி, ஜெபித்தார். ஒரு இரவில், அவ்வாறு அவர் அந்தப் பெண்களைச் சந்தித்து வருகையில், ஒரு பெண்ணிடம், ஏதாவது ஜெப விண்ணப்பம் இருக்கிறதா என்று கேட்டார். "ஆம், நான் பாதுகாப்பாக இருப்பதற்கு ஜெபியுங்கள்" என்றாள். "எதிலிருந்து பாதுகாப்பு வேண்டும்".

முந்தின நாள் இரவில் யாரோ ஒருவர் தன் கழுத்தை நெரித்ததாகச் சொன்னாள். அவளால் மூச்சுவிட முடியவில்லை; அப்போது பிரகாசமான ஓர் ஒளி தோன்றியதால், அவள் கழுத்தை நெரித்த உருவம் மறைந்தது. அந்தப் பிரகாசமான ஒளியல் ஒரு தூதன் தோன்றி, 'பயப்படாதே' என்று சொன்னார். உடனே அவளுக்குள் சமாதானம் வந்தது. நன்றாகத் தூங்கினாள். அதுபற்றி அவள் யாரிடமும் சொல்லவில்லை; இப்போது ரேச்சலிடம் சொன்னாள்.

அவளுக்காக ரேச்சல் ஜெபித்தபோது, அந்தக் கோடை முகாமில், இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ள அதிகமாக விரும்பினாள். பொதுவாக அவள் யாரிடமும் அதிகமாகப் பேசுவதில்லை. ஆனால் அவளது இருதயத்தில் ஒரு விதை ஊன்றப்பட்டது. அடுத்த வருடத்திலும் அவள் பயிற்சிக்காக அந்த முகாமிற்கு வந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.



ரேச்சல் கார்லே, அலாஸ்காவிலுள்ள ஸிட்காவில் ஒரு அட்வென்டிஸ்ட் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்; போலரிஸ் முகாமில் ஒரு தன்னார்வலராகவும் பணியாற்றுகிறார்; அந்த முகாமில்தான் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற போராட்டத்தை கண்கூடாகப் பார்த்தார். "போலரிஸில் வேலை செய்தபோதுதான் இயேசுவை அறியாத பலர் அமெரிக்காவில் இருப்பதை அறிந்துகொண்டேன். இந்த முகாமில் வேலை செய்தபோதுதான் ஆசிரியையாக வேண்டுமெனத் தீர்மானித்தேன்" என்று சொன்னார்.